இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 323 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – ஆனி 20 – சனிக்கிழமை 04 ஜூலை 2026 – வெளியூர் 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 323 : Thiruvalluvar Year - 2057 - Aani 20 - Saturday 04 July 2026 - Dak 8 Pages ₹ 5.00


## மக்கள் பணியில் ஈடுபட்டிருந்த அனிதா ராதாகிருஷ்ணன் எம்.எல்.ஏ. அவசர அவசரமாக கைது!

# “ஆணவம் அழிவிற்கு வழி” - தலைவர் மு.க.ஸ்டாலின் கடும் கண்டனம்!

## ‘சினிமா ஆக்ஷன்’ பாணியில் போலீஸ் ராஜ்யம் நடத்துகிறார் முதலமைச்சர் என குற்றச்சாட்டு!

**சென்னை, ஜூலை 4-**

**மக்கள் பணியில் ஈடுபட்டிருந்த முன்னாள் அமைச்சர், சட்டமன்ற உறுப்பினர் அனிதா ராதாகிருஷ்ணனை அவசர அவசரமாக கைது செய்ய வேண்டிய அவசியம் என்ன வந்தது எனவும், சினிமா ஆக்ஷன் பாணியில் முதலமைச்சர் விஜய் போலீஸ் ராஜ்யம் நடத்துகிறார் என்றும் “ஆணவம் அழிவிற்கு வழி” எனவும் கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.**





தமிழ்நாட்டில் காட்டுமிராண்டித்தனமான ஆட்சியை நடத்தி வரும் த.வெ.க. அரசு, தனது பழிவாங்கும் நடவடிக்கையாக தி.மு.க. முன்னாள் அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் எம்.எல்.ஏ.வைக் கைது செய்துள்ளது.

தமிழ்நாட்டில் அமைந்துள்ள விஜய் தலைமையிலான பெரும்பான்மை இல்லாத த.வெ.க. அரசு, பல்வேறு அட்டூழியங்களில் ஈடுபட்டு வருகிறது. ஆட்சியை நடத்தத் தெரியாமல், முதல் நாளில் இருந்தே, முதலும் கோணல், முற்றும் கோணலுமாக இருந்து வருகிறது. மக்களுக்கான எந்தவொரு திட்டங்களையும் செயல்படுத்தத் தெரியாமல், அதனைத் திசை திருப்பும் வகையில் பல்வேறு தில்லுமுல்லுகளில் ஈடுபட்டு வருகிறது.

குறிப்பாக பல்வேறு பொய்க் குற்றச்சாட்டுகளின்பேரில் தி.மு.க.வினர் மீது வழக்குப்பதிவு செய்வது, நடவடிக்கை எடுப்பது என முழு கவனத்தையும் அதில் மட்டுமே செலுத்தி வருகிறது.

**த.வெ.க. அரசின் சர்வாதிகாரம்!**

அந்தவகையில், விஜயின் காட்டு மிராண்டித்தனமான அராஜக ஆட்சி, தனது பழிவாங்கும் நடவடிக்கையாக தி.மு.க. முன்னாள் அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணனை கைது செய்துள்ளது. ஆத்தூர் பேரூராட்சி அலுவலகத்தில் ஆய்வு மேற்கொள்ள வந்தபோது அனிதா ராதாகிருஷ்ணனை காவல்துறையினர் கைது செய்தனர். அப்போது, த.வெ.க. அரசின் சர்வாதிகாரத்தனத்தைக் கண்டித்து தி.மு.க.வினர் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

**கழகத் தலைவர் வலைதளப் பதிவு!**

இந்நிலையில் முன்னாள் அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் கைது செய்யப்பட்டுள்ளதைக் கண்டித்து கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது சமூக வலைதளப் பதிவில் தெரிவித்துள்ளதாவது:-

**முதலமைச்சரை அவதூறாகப் பேசினார் என்று முன்னாள் அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் அவர்களைக் கைது செய்துள்ளது ‘Take Diversion’ அரசு.**

**தொகுதியில் ஆய்வு மேற்கொண்டு மக்கள் பணியில் ஈடுபட்டு இருந்தவரை, அவசர அவசரமாகக் கைதுசெய்ய வேண்டிய அவசியம் என்ன வந்தது?**

## அவதூறு வழக்கில் கைது என்றால் – இன்றைய எத்தனை அமைச்சர்களைக் கைது செய்வீர்கள்?

**பெண் புகாரில் தூயசக்தி ஆட்சி எடுத்த நடவடிக்கை என்ன?**

**சினிமா ஆக்ஷன் பாணியில் போலீஸ் ராஜ்ஜியம் நடத்திக் கொண்டிருக்கிறார் முதலமைச்சர்!**

**கூட்டுப் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளான பெண்மணி திருவைகுண்டம் த.வெ.க. சட்டமன்ற உறுப்பினர் மேல் கூறியுள்ள புகாரில் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்காத ‘தூயசக்தி ஆட்சி’, அந்த வழக்கில் ஏன் இந்த அவசரத்தைக் காட்டவில்லை?**

**குற்றங்களைத் தடுக்க வக்கில்லாத ஆட்சி!**

**தமிழ்நாடு முழுவதும் நடைபெறும் கொலை, கொள்ளைகளையும் பெண்களுக்கு எதிரான பாலியல் குற்றங்களையும் தடுக்க வக்கில்லாமல் அடுத்த கட்சி சட்டமன்ற உறுப்பினர்களை இணைத்துக் கொண்டிருக்கும் இந்த அரசின் மாற்றம் இதுதானா?**

**அவதூறு வழக்கில் கைது செய்வதாக இருந்தால், இன்றைய அமைச்சர்கள் பேசும் பேச்சுக்கு எல்லாம் எத்தனை பேரைக் கைது செய்வது?**

**குதிரை பேரத்தின் மூலம் ஆட்சியை நடத்தும் முதல்வர்!**

**வாக்களித்த மக்களுக்கு எந்த நன்மையும் செய்யாமல், குதிரை பேரத்தின் மூலமாகத் தனது நாற்காலியைத் தக்க வைத்து விமர்சிக்கும் எதிர்க்கட்சிகளைக் கைது செய்து காலம் கடத்திவிடலாம் என நினைக்கிறார் முதலமைச்சர்.**

**“ஆணவம் அழிவிற்கு வழி!”**

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

### மறைமுக கட்டண உயர்வால் அதிர்ச்சி!

# மாதம் 200 யூனிட் இலவச மின்சாரம் எங்கே?

## த.வெ.க. அரசுக்கு மக்கள் கேள்வி!

*சென்னை, ஜூலை 4-*

*மாதம் 200 யூனிட் கட்டணமில்லா மின்சாரம் எங்கே? எனவும் 2 மாதத்திற்கு 400 யூனிட் இலவச மின்சாரம் எங்கே போனது முதல்வரே?*

*யூனிட்டுக்கு 55 காசுகள் வரை மறைமுக கட்டண உயர்வு ஏன் எனவும் மக்கள் கேள்வி எழுப்பினார்.*

*த.வெ.க. தலைமையிலான விஜய் அரசு, மின்கட்டணத்தை மறைமுகமாக உயர்த்தியது மட்டுமல்லாமல், வேண்டுமென்றே காலம் தாழ்த்தி அளவீடுவதன் மூலம் மின் கட்டணம் பல மடங்கு அதிகரித்திருப்பது பொதுமக்களை அதிர்ச்சி அடைய வைத்துள்ளது. எங்கே போனது 200 யூனிட் இலவச மின்சாரம் என தவெக அரசிடம் பொதுமக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.*

*தகுதியுள்ள வீடுகளுக்கு ஒவ்வொரு மாதமும் 200 யூனிட் கட்டணமில்லா மின்சாரம் வழங்கப்படும் என த.வெ.க. தலைவர் விஜய் தேர்தல் வாக்குறுதி அளித்திருந்தார்.*

*வாக்குறுதிப்படி, மாதம் 200 யூனிட் என்றால், 2 மாதத்திற்கு ஒரு முறை கணக்கிடப்படும் மின்சாரத்தில், 400 யூனிட் கட்டணமில்லா மின்சாரம் வழங்கப்பட வேண்டும். 2 மாதத்திற்கு 400 யூனிட்டுக்கு பதில் 200 யூனிட் கட்டணமில்லா மின்சாரம் மட்டுமே வழங்கப்படுகிறது, அதுவும் 500 யூனிட்டுகளுக்கு மேல் பயன்படுத்தப்படும் வீடுகளுக்கு 200 யூனிட் கட்டணமில்லா மின்சார சலுகை கிடையாது என அறிவிக்கப்பட்டது, நம்பி வாக்களித்த மக்களை ஏமாற்றத்திற்கு உள்ளாக்கி உள்ளது.*

*மேலும், 200 யூனிட் இலவச மின்சாரத்தை தடுக்க, மின்வாரிய ஊழியர்கள் வேண்டுமென்றே காலம் தாழ்த்தி அளவீடு செய்வதன் மூலம், மின் பயன்பாடு 500 யூனிட்டுக்கு மேல் கடந்துள்ளது. இதனால், தற்போது நுகர்வோர், வழக்கத்தை விட 3 ஆயிரம் ரூபாய் வரை அதிக கட்டணம் செலுத்த வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். இதில் மறைமுக மின் கட்டணமாக யூனிட்டுக்கு 20 முதல் 55 காசுகள் வரை உயர்த்தி இருப்பதும் சாமானிய மக்களை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.*

*முன்பு 100 யூனிட்டுக்கு மேல் 400 யூனிட்டுக்குள்ளாக 4 ரூபாய் 50 காசாக இருந்த மின்கட்டணம், தற்போது 4 ரூபாய் 70 காசுகளாகவும், 401 யூனிட்டுக்கு மேல் இருந்த 500 யூனிட்டுகளுக்குள்ளாக 6 ரூபாயாக இருந்த மின்கட்டணம், தற்போது 6 ரூபாய் 30 காசுகளாகவும் உயர்த்தப்பட்டுள்ளது. இதேபோல் ஆயிரம் யூனிட்டுகளுக்கு மேல் 11 ரூபாயாக இருந்த கட்டணம் 11 ரூபாய் 55 காசுகளாகவும் மறைமுகமாக உயர்த்தப்பட்டுள்ளது பொதுமக்களை ஏமாற்றமடைய வைத்துள்ளது.*

